IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.89/2008
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 12.00 PM.

<u>பி.வா.சா.1 சாட்சி சிவமுருகன் த.பெ.வெள்ளையன் சிவணான்டி</u>

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 04.02.2026 in accordance with the provisions of Act XX141.**

<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> :

1. என் பெயர் சிவமுருகன் என்றால் சரிதான். எனது சொந்த ஊர் மேலஉரப்பனூர் கிராமம் என்றால் சரிதான். நான் பட்டியான் வகையறாவை சேர்ந்தவன் என்றால் சரிதான். வாதி கூனன் பங்காளி வகையறாவை சேர்ந்தவன் என்றால் சரிதான். பெரிய வெள்ளையதேவர் தேர்ந்து எடுப்பதில் எங்களுக்குள் ஊரில் போட்டாபோட்டி இருந்து வருகிறது என்றால் சரிதான்.

2. நான் பிறந்து வளர்ந்து வந்தது எல்லாம் மேலஉரப்பனூர் என்றால் சரிதான். எனது அப்பா எனது மூதாதையார்கள் மேலஉரப்பனூரில் பிறந்து வளர்ந்தார்கள் என்றால் சரிதான். நான் குடியிருக்கும் வீடு சொந்த வீடு என்றால் சரிதான். நான் குடியிருக்கும் வீடு நான் கிரையம் வாங்கவில்லை எனது பாட்டன் வாங்கின சொத்து ஆகும் என்றால் சரிதான். எனது தாத்தா, எனது அப்பா, நான் எல்லோரும் நத்தத்தில் குடியிருந்து வருகிறோம் என்றால் சரிதான். நான் குடியிருக்கும் வீடு எனது பாட்டனார் சிவன் வெள்ளையன் சம்பாதித்த சொத்து ஆகும் என்றால்சரிதான். அந்த வீட்டில்தான் பாரம்பரியமாக குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். நத்தத்திற்கு பட்டா, சிட்டா, கிரைய பத்திரம் எதுவும் இல்லை என்றால் சரிதான்.

3. நத்தத்தில் குடியிருந்ததால் மேற்படி வீடு எனக்கு சொந்தமாகிவிட்டது என்றால் நான் குடியிருக்கும் வீடு எனது அப்பா பெயரில் உள்ளது. எனது

அப்பா பெயரில் உள்ள ஆவணங்களை எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் விவசாயம் செய்து வருகிறேன் என்றால் சரிதான். எனது அப்பாவும் விவசாயம் செய்து வருகிறார் என்றால் சரிதான். ஆடு, மாடு, கோழி ஆகியவை வளர்க்கிறோம் என்றால் சரிதான். நத்தத்தில் ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டி வாழ்ந்து வருவதால் எனக்கு சொந்தம் என்றால் சரிதான்.

4. நான் குடியிருக்கும் வீட்டிலிருந்து என்னை யாரும் காலி செய்ய முடியாது என்றால் சரிதான். நத்தமாக இருப்பதால் அந்த இடத்தை யாரும் அரசாங்கம் காலி செய்ய முடியாது என்று சொன்னால் சரிதான். நான் குடியிருக்கும் வீட்டிற்கு சர்வே எண் தெரியாது என்றால் சரிதான். நான் குடியிருக்கும் பகுதியின் நத்தம் சர்வே எண். 252 என்றால் தெரியாது. சர்வே எண். 252 என்று சொன்னால் சரியல்ல. எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். எனக்கு விஸ்தீரணம், கிரைய பத்திரம், அடமானம், ஒத்தி என்பது தெரியுமா என்றால் தெரியும்.

5. எனது தகப்பனார் பெயர் வெள்ளையன் சிவணான்டி என்றால் சரிதான். பெரியகருப்புதேவர் எனது சித்தப்பா என்றால் சரிதான். லெட்சுமி எனது சித்தப்பாவின் மனைவி என்றால் சரிதான். சிவசுந்தரி என்பவர் எனது தங்கை என்றால் சரிதான். மீனாட்சி என்பவர் எனது மனைவி என்றால் சரிதான். ஜெயா என்பவர் எனது சித்தப்பாவின் மகள் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு எனது பெயரிலோ, எனது அப்பா, எனது பாட்டனார் பெயரிலோ, சிட்டா, அடங்கல் எந்தவிதமான ஆவணமும் இல்லை என்றால் சிவன் வெள்ளையன் தேவரின் பெயரில் இருக்கிறது. பட்டனார் பத்திரமாக போட்டுவைத்துள்ளார். மேற்படி பத்திரத்தை நான் பார்த்திருக்கிறேனா

என்றால் பார்த்து இருக்கிறேன். மேற்படி பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாமா என்றால் எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன்.

6. எனது வழக்கறிஞர் மேற்படி பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஜெயகண்ணனிடம் எனது அப்பா ஒத்தி வாங்கவில்லை என்றால் சரிதான். பின்னிட்டு தாவா இடத்தில் எதன் அடிப்படையில் குடியிருக்கிறேன் என்றால் எனது கைவசம்தான் உள்ளது. எந்த ஆவணத்தின் அடிப்படையில் இருக்கிறேன் என்றால் எனது ஆதாரத்தில் இருக்கிறேன்.

7. மேற்படி இடத்திற்கு பட்டா, சிட்டா, அடங்கல், பி மெமோ எனது பெயரில் ஏற்பட்டுள்ளதா என்றால் எனது பாட்டன் பெயரில் உள்ளது. எனது பெயரில் இல்லை. நான் ஒத்திதாரர் என்ற அடிப்படையில்தான் இருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. மேற்படி ஒத்தி பதிவு செய்யப்பட்ட ஒத்தி என்றால் சரியல்ல. பொதுவாக ஒத்தி வைத்தால் ஒத்தி வாங்கியவரிடம்தான் அசல் பத்திரம் இருக்கும் என்றால் சரியல்ல. ஒத்தி பத்திரத்தின் அசல் என்னிடம் உள்ளது என்றால் சரியல்ல. எனது அப்பா இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது அப்பா இறந்த பிறகு எனது தாயார் மற்றும் நான் வாரிசாக சேர்க்கப்பட்டோம் என்றால் சரிதான். எனது தாயார் இறந்துவிட்டார் என்றால் சரிதான்.

8. எனது தங்கையையும் வழக்கில் சேர்த்துள்ளோம் என்றால் சரிதான். வா.சா.ஆ. 6 ஆவணம் வழக்கறிஞர் அறிவிப்பில் ஒத்திதாரர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 6 ஆவணத்திற்கு எதிராக நான் சாட்சியம் அளிக்க முடியாது என்றால் சரியல்ல. ஜெயகண்ணு ரூ.1500/– பெற்றுக்கொண்டு தாவா இடத்தை 3 ஆண்டுகால சங்கைக்கு ஒத்தி

வைத்தார் என்றும் மேற்படி ஒத்தி காலம் முடிந்தவுடன் எனது தகப்பனாருக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டது, அந்த அறிவிப்பு வா.சா.ஆ. 5 என்றால் தெரியாது.

9. மேற்படி அறிவிப்பை எனது தந்தை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை வா.சா.ஆ. 7 என்றால் தெரியாது. மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொண்டுதான் எனது தந்தை எனது வழக்கறிஞர் மூலம் வா.சா.ஆ. 6 வழக்கறிஞர் பதில் அறிவிப்பை அனுப்பினார் என்றால் தெரியாது. அதனால்தான் எங்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டு திருமங்கலம் நகர் காவல் நிலையத்தில் குற்ற எண். 174/2008 ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கு முடிந்துவிட்டது.

(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)
முடிவடையும் நேரம்: 12.30 PM.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை

தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி

அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்

கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.02.04 10:03:49 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),

திருமங்கலம்.